<u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – விடுதிகள் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழான அறிவிப்பு – 10 ஆண்டுகளுக்கு மேலான 20 பழங்குடியினர் நல விடுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் – **ரூ.3,82,86,328/–**க்கு நிர்வாக அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2) துறை</u>**

**அரசாணை(2ப) எண்: 25** **நாள் : 26 .02.2021.**

திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி, மாசி 14 –ஆம் நாள்.
படிக்கப்பட்டது:–

இயக்குநர், பழங்குடியினர் நலம், அவர்களின் கடித ந.க.எண்பமே/ஆ3/3010/2020, நாள்.26.05.2020.

**ஆணை :**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 24.03.2020 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–இன் கீழ் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள்:-

> **“10 ஆண்டுகளுக்கு மேலான, 80 ஆதிதிராவிடர் நல விடுதிகள் மற்றும் 20 பழங்குடியினர் நல விடுதிகளில் கூடுதல் கழிவறைகள், குளியலறைகள், மின் சாதனங்கள் போன்ற அடிப்படை வசதிகள் தலா 20 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்”.**

2. இவ்வறிவிப்பு தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநர், பழங்குடியினர் நல துறையின் கீழ் 43 விடுதிகளில் 2202 மாணாக்கர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர் என்றும் மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு தாட்கோ நிறுவனம் மூலம் 43 பழங்குடியினர் நல விடுதிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதில் 15 பழங்குடியினர் நல மாணவர் விடுதிகள் மற்றும் 5 பழங்குடியினர் நல மாணவியர் விடுதிகள் ஆக மொத்தம் 20 பழங்குடியினர் நல விடுதிகளை தேர்வு செய்து கழிவறை, குளியலறை, குடிநீர் வசதி மற்றும் மின் இணைப்புகள் சரி செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.4,06,50,000/–க்கு திட்ட மதிப்பீடு பெறப்பட்டுள்ளதாக தெரிவித்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் தெரிவு செய்யப்பட்ட 20 பழங்குடியினர் நல விடுதிகளில் ரூ.4,06,50,000/– மதிப்பீட்டில் கழிவறை, குளியலறை, குடிநீர் வசதி மற்றும் மின் இணைப்புகள் சரிசெய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்தும், நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

3. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, 10 ஆண்டுகளுக்கு மேலான, இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள 20 பழங்குடியினர் நல விடுதிகளில் கூடுதல் கழிவறைகள், குளியலறைகள், மின் சாதனங்கள் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.3,82,86,328/– (ரூபாய் மூன்று கோடியே எண்பத்திரெண்டு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து முந்நூற்று இருபத்தெட்டு மட்டும்)– க்கு பழங்குடியினர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4.இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.10988/நிதி(ஆதி(ம)பந)/2021, நாள்.26.02.2021–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஷம்பு கல்லோலிகர்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ)**

**<u>பெறுநர்:</u>**
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 009/18.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
பட்டியல்
கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி, திண்டுக்கல், சேலம், தருமபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, வேலூர், கள்ளக்குறிச்சி மாவட்டஆட்சியர்கள்
கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி, திண்டுக்கல், சேலம், தருமபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, வேலூர், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்,

**<u>நகல்:</u>**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –600 009.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
நிதி(ஆதி(ம)பந/வ.செ/பொ–1)த் துறை, சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.4/ ஆதிந.5 ) துறை, சென்னை –600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
26.2.21

இணைப்பு

அரசாணை (நிலை) எண். 25

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந2) துறை, நாள்.26 .02.2021

பழங்குடியினர் நல விடுதிகள் விவரம்

| வ. எண். | மாவட்டம் | விடுதியின் விபரஙகள் | விடுதியின் இருப்பிடம் |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | மாணவர் விடுதி | சின்னதடாகம் |
| 2 | ஈரோடு | மாணவர் விடுதி | அந்தியூர் |
| 3 | நீலகிரி | மாணவர் விடுதி | நீரகாஞ்சிமண்டு |
| 4 | நீலகிரி | மாணவர் விடுதி | ஆணைபள்ளம் |
| 5 | திண்டுக்கல் | மாணவர் விடுதி | நடுப்பட்டி |
| 6 | திண்டுக்கல் | மாணவியர் விடுதி | நடுப்பட்டி |
| 7 | திண்டுக்கல் | மாணவர் விடுதி | தண்டிகுடி |
| 8 | சேலம் | மாணவர் விடுதி | பிலியூர் |
| 9 | தருமபுரி | மாணவர் விடுதி | மாரதாஹல்லி |
| 10 | தருமபுரி | மாணவியர் விடுதி | மதிகொண்பாளையம் |
| 11 | நாமக்கல் | மாணவர் விடுதி | வாழவந்திநாடு |
| 12 | நாமக்கல் | மாணவியர் விடுதி | வாழவந்திநாடு |
| 13 | நாமக்கல் | மாணவியர் விடுதி | செஙகரை |
| 14 | நாமக்கல் | மாணவர் விடுதி | நாமக்கல் |
| 15 | திருச்சி | மாணவர் விடுதி | முருகன்பட்டி |
| 16 | கிருஷ்ணகிரி | மாணவர் விடுதி | அஞ்சட்டி |
| 17 | ருவண்ணாமலை | மாணவியர் விடுதி | ஜமுனாமரத்தூர் |
| 18 | வேலூர் | மாணவர் விடுதி | ஒடக்காட்டுப்புதூர் |
| 19 | வேலூர் | மாணவர் விடுதி | அத்தனாவூர் |
| 20 | கள்ளக்குறிச்சி | மாணவர் விடுதி | சஙகராபுரம் |

**ஷம்பு கல்லோலிகர்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ)**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

26.2.21